# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - **9**, No.**8**, பாரதியார் **2** வது தெரு,* S.S. *காலனி மதுரை – **10**.* Ph. 0452 – 4354302

# இயேசுகிறிஸ்துவின் சிலுவை

**முன்னுரை :**

கிறிஸ்துவின் சிலுவையானது மையமாகவும், எல்லா கிறிஸ்தவப் போதனைகளுக்கு மூலகாரணமாகவும் இருக்கிறது. கிறிஸ்தவ மதத்தின் அடையாளமாகவும், கிறிஸ்தவ நாகரீகத்தின் அடிப்படைக் காரியங்களை உள்ளடக்கியதாகவும் இருக்கிறது. உலக வரலாற்றில் சிலுவையானனது முக்கிய இடத்தை வகிக்கிறது. பழைய ஏற்பாட்டில் இச்சிலுவையைக் குறித்து நிழலாக அநேகக் காரியங்கள் சொல்லப்பட்டுள்ளது. மேலும் இச்சிலுவையைக் குறித்து அநேகத் தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார்கள். இவைகள் அனைத்தும் நிறைவேற இவ்வுலகம் ஏறத்தாழ நாலாயிரம் ஆண்டுகள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக இச்சிலுவையின் வெற்றியையும், பயனையும் இவ்வுலகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இப்பாடத்தில் கிறிஸ்தவப் போதனைக்கும், நடக்கைகக்கும் தொடர்புடைய இச்சிலுவையின் செய்தி, பொருள், ஆழம் முதலானவற்றை உங்களுக்கு முன்வைப்பதே எங்களுடைய நோக்கமும், விருப்பமுமாய் இருக்கிறது.

**இப்பாடத்தின் முக்கியத்துவம் :**

மனிதனை அவனுடைய பாவத்திலிருந்து மீட்க கிறிஸ்து சிலுவையில் மரித்தார் இது தேவனுடைய நித்திய திட்டமாகும். அனைத்துக் கிறிஸ்தவப் போதனைகளும் சிலுவையிலிருந்தே ஆரம்பமாகிறது. சிலுவையானது புதிய ஏற்பாட்டு சபையின் மையமாகவும், அப்போஸ்தலர்களுடைய பிரசங்கத்தின் மத்திய பாகமாகவும் இருந்தது. சிலுவையைக் கிறிஸ்துவத்திலிருந்து நீக்கிவிடுவோ மென்றால், கிறிஸ்தவத்தில் ஒரு செய்தியோ அல்லது பொருளோ இருக்காது. கிறிஸ்தவத்தில் சிலுவையைச் சேர்க்கும்பொழுது மட்டுமே ஒவ்வொரு விசுவாசியும் அதைக் குறித்து மேன்மைபாராட்ட முடியும். அதுமட்டுமல்லாமல் இவ்வுலகமானது அச்சிலுவையை நோக்கிப் பார்ப்பதன் மூலம் பாவத்திலிருந்து விடுதலை பெற்று வாழமுடியும். எங்களுடைய ஜெபமானது இச்சிலுவையின் மகத்துவத்தை பரிசுத்த ஆவியானவர் தாமே உங்களுடைய இருதயங்களிலும், வாழ்க்கையிலும் கொழுந்துவிட்டு எரியச் செய்யவேண்டும் என்பதே.

**பாடம்**

## I. சிலுவையின் மூலம் ஏற்பட்ட மரணத்தின் அவமானம் :

அ. ரோமர்கள் சிலுவையின் மூலம் ஏற்படும் மரணத்தை மிகவும் வெறுக்கத்தக்க காரியமாகக் கருதினார்கள். ரோமக் குடியுரிமைப் பிரஜைகள் அனைவரும் இப்பேர்ப்பட்ட மரணத்திலிருந்து விலக்கப்பட்டிருந்தார்கள். காரணம் சிலுவை மரணமானது கொடிய அடிமைகளுக்குக் கொடுக்கப்படும் தண்டனையாகக் கருதப்பட்டு வந்தது.

ஆ. கிறிஸ்துவை ஒரு குற்றவாளியாகக் கணக்கிட்டு இக்கொடிய தண்டனையை அவருக்கு வழங்கினார்கள். பொதுவாக இராஜதுரோகம், பெரும் திருட்டு, கப்பற்கொள்ளை, வஞ்சனையான கொலை முதலானவற்றைச் செய்பவர்களே இத்தண்டனையைப் பெறுவர்.

இ. சிலுவையின் அவமானமானது தம்முடைய சொந்த ஜனங்களால் புறக்கணிக்கப்பட்டு, நாடு கடத்தப்படும் இழிவையும் உள்ளடக்கி இருக்கிறது (யோவான் 1:11).

ஈ. சிலுவையின் மூலம் மரித்தவர்கள் அனைவரும் சபிக்கப்பட்டவர்களாக கருதப்படுகின்றனர் (உபாகமம் 21:23; கலாத்தியர் 3:13).

உ. கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்து அவருடைய வஸ்திரத்தைப் பங்குபோட்டார்கள், பரியாசம் பண்ணினார்கள், நிந்தித்தார்கள், இழிவுபடுத்தினார்கள். இவையெல்லாவற்றையும் கிறிஸ்து பொறுமையாகச் சகித்துக்கொண்டார் (மத்தேயு 27:35,36).

ஊ. தன்னை அர்ப்பணம் செய்த ஒரு விசுவாசிக்கு சிலுவையானது விலையேறப்பெற்றதும், அர்த்தம் உடையதுமாய் இருக்கிறது. ‘‘அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணமால், சிலுவையைச் சகித்தார்’’ (எபிரெயர் 12:2). அதாவது ‘‘சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார்’’ (பிலிப்பியர் 12:2).

## II. சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டதின் மூலம் ஏற்பட்ட மரண வேதனை :

அ. சிலுவையில் அறைந்து கொல்லுவதற்கு முன்பு பொதுவாக சவுக்கு போன்ற கருவியினால் அடித்துத் துன்புறுத்துவதுண்டு (யோவான் 19:1; மத்தேயு 27:26). அதிக வேதனையை கூட்டுவதற்காகவே இப்பேர்ப்ட்ட தண்டனை கொடுக்கப்படுகிறது. இப்படி தண்டனை கொடுக்க பயன்படுத்தும் கருவியில் ஒரு கைப்பிடி இருக்கும். அதனுடைய நுனியில் எலும்பு அல்லது உலோகம் வரிசையாக தொங்விடப்பட்டிருக்கும். தண்டனை பெறுபவரை ஒரு மரத்தில் கட்டிவைத்து முதுகில் அடிப்பதுண்டு, இத்தண்டனை யானது மிகவும் கொடூரமானதாக இருக்கும். இத்தண்டனையைப் பெறுபவர் உடனே மரிப்பதில்லை ஆனால் மயங்கி கீழே விழுந்து விடுவதுண்டு. கிறிஸ்து இந்த கொடூரமான தண்டனையை ஏற்றுக்காண்டார் (உபாகமம் 25:3; மத்தேயு 27:26; 2 கொரிந்தியர் 11:24).

ஆ. நமது ஆண்டவரின் தலையில் முள்முடியை வைத்து அடித்து அதிகமாக வேதனையைக் கூட்டினார்கள் (மத்தேயு 27:29). முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலதுகையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்படியிட்டு; யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரைப் பரியாசம் பண்ணி, அவர்மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து அவரைச் சிரசில் அடித்தார்கள் (மத்தேயு 27:29,30)

இ. சிலுவையில் அறைந்து கொல்லுவதற்கு பொதுவாக நான்கு விதமான சிலுவை மரங்கள் பயன்படுத்தப்பட்டன. கிறிஸ்துவை அறைந்து கொல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட மரமானது ''குரூக்ஸ் இம்மிஸா'' என்று பொருள்படும். இச்சிலுவையில் தலைப் பகுதியானது சற்று நீண்டு காணப்படும். கிறிஸ்துவின் கைகளிலும், கால்களிலும் ஆணிகள் கடாவப்பட்டது (யோவான் 20:25; கொலோசெயர் 2:14).

ஈ. சிலுவையில் அறைந்து கொல்லப்படும் அந்த கொடூரமான காட்சியை மிகவும் துல்லியமாக விவரிக்க முடியாது. யூதேயா தேசத்தில் இவ்வாறு சிலுவையில் தொங்கும் நபருக்கு அவருடைய வேதனையைக் குறைக்க கசப்புக்கலந்த காடியைக் குடிக்கக் கொடுப்பார்கள். கிறிஸ்துவுக்கு காடியைக் குடிக்கக் கொடுத்த பொழுது அதைக் குடிக்க மனதில்லாதிருந்தார் (மத்தேயு 27:34). சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த கிறிஸ்துவுக்கு சூரிய வெப்பத்தால் இன்னும் வேதனைன பெருகினது. கால்களிலும், கைகளிலும் ஏற்பட்ட காயங்கள், இரத்தப் பெருவெள்ளம் இவையனைத்தும் அவருக்கு பெரும் தாகத்தைக் கொடுத்தது (யோவான் 19:28). கிறிஸ்துவின் கைகளிலும், கால்களிலும் ஆணிகள் கடாவப்பட்டபடியினாலே அவருடைய நரம்புகள் கிழிக்கப்பட்டது. இது அவருக்குக் கொடிய வேதனையைக் கொடுத்தது. மேலும் அவருடைய சிரசில் முள்முடியை வைத்து அழுத்தின படியால் அவருக்கு பயங்கரவலி தலையில் இருந்தது. மேலும் சிலுவையில் அறையப்பட்டவர்கள் மரித்துப்போக வில்லையென்றால், அவர்களுடைய கால்களை முறித்து இன்னும் வேதனையைக் கூட்டுவர்கள். ஆனால் கிறிஸ்துவின் எலும்புகளில் ஒன்றாகிலும் முறிக்கப்படவில்லை (யோவான் 19:31–34).

<u>குறிப்பு :</u>

கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்துச் சிந்திக்கக் கீழ்கண்ட வசனங்களை வாசிக்கவும்.

1. எபிரெயர் 12:2, ''அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணமால், சிலுவையைச் சகித்தார்''
2. 1 பேதுரு 2:23, ''அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும் நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்''
3. 1 பேதுரு 3:18, ''கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுககுப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார். . . . ''

## III. அப்போஸ்தலர்களின் பிரசங்கத்தில் கிறிஸ்துவின் சிலுவையே மையமாக (அல்லது) இருதயமாக விளங்கினது :

அ. 1 கொரிந்தியர் 1:18, ''சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெனாயிருக்கிறது''

ஆ. 1 கொரிந்தியர் 2:2, ''இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்''

இ. கலாத்தியர் 6:14, ''நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக. . . . ''

ஈ. எபேசியர் 2:16, ''பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்''

உ. கொலோசெயர் 1:20, "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கினார்"

ஊ. கொலோசெயர் 2:14, "சட்டத்தை நடுவிலிராதபடிக்கு எடுத்து சிலுவையின்மேல் ஆணியடித்து. . ."

எ. கலாத்தியர் 3:1, ". . . இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே"

ஏ. 1 பேதுரு 2:24, ". . . அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்"

ஐ. 1 பேதுரு 1:19, "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே நாம் மீட்கப்பட்டிருக்கிறோம்."

## IV. சிலுவையின் ஒப்புரவாக்கும் பணி :

<u>குறிப்பு :</u>

2 கொரிந்தியர் 5:18, ". . . அவர் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்." 'ஒப்புரவாக்குதல்' என்ற வார்த்தையின் கருத்தானது 'தேவனுடைய தயவை மறுபடியும் பெறுவதாகும்'. ஒப்புரவாகுதல் என்பது அந்நியத்திற்கும், விரோதத்திற்கும் ஏற்படும் முடிவு ஆகும். தேவனுக்கு விரோதிகளாக இருந்தவர்கள் சிலுவையின் மூலம் நண்பர்களாக மாறுகின்றனர். தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே இருந்த பகையையானது சிலுவையினாலே நீக்கப்பட்டது, யூதரும், புறஜாதியாரும் சிலுவையின் மூலம் ஒன்றாக இணைக்கப்பட்டனர்.

அ. தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணமால், கிறிஸ்துவுக்குள்அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கிக் கொண்டார் (2 கொரிந்தியர் 5:19). அவிசுவாசமான, மூர்க்கமான, பாவமான இந்த உலகத்திற்கும், தேவனுக்கும் கிறிஸ்துதாமே மத்தியஸ்தராக இருந்து சமாதானத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

ஆ. யூதருக்கும், புறஜாதியாருக்கும் இடையே இருந்த பகையைக் கிறிஸ்து சிலுவையின் மூலம் தகர்த்தெறிந்து, இருதிறத்தாரையும் ஒன்றாக்கியிருக்கிறார்.

"அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவனையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படி சமாதானம் பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்" எபேசியர் 2:14–16; ரோமர் 5:10).

இ. கொலோசெயர் 1:20,21 "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ள வைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று. முன்னே அந்நியராயும், துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும், பரிசுத்தராகவும், குற்றமற்றவர்களாயும், கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்."

ஒவ்வொரு விசுவாசிக்கும் சமாதான உடன்படிக்கை தேவனோடு ஏற்படுத்தப்பட்டு, முத்திரையிடப்பட்டு, கிறிஸ்துவின் பரிசுத்த இரத்தத்தால் காக்கப்பட்டு இருக்கிறது. நம்முடைய பாவங்கள் அனைத்தும் நியாயந் தீர்க்கப்பட்டு, தொலைக்கப் பட்டாயிற்று. கறிஸ்துவின் பரிசுத்த இரத்தம் சிந்தப்பட்டபடியினாலே தேவன் அதில் சந்தோஷம் அடைந்தார் (அல்லது) திருப்தியடைந்ததார். கிறிஸ்துவின் மூலமாக எவரேனும் எந்தவித பயமுமின்றி தேவனிடத்தில் சேரமுடியும்.

ஈ. பாவமறியாத தேவன்தாமே ஒப்புரவாக்குதலுக்குத் தேவையான எல்லா காரியங்களையும் செய்கிறவராயிருக்கிறார் என்பதை நாம் குறிப்பாகக் கவனிக்க வேண்டும். 2 கொரிந்தியர் 5:18,19, "தேவன் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரபாக்கி, அவர் உவகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கினார்".

## V. சிலுவையும், சட்டமும் :

<u>குறிப்பு :</u>

சட்டமானது அனைவரையும் நியாயந்திர்த்து தண்டனைக்குட்படுத்தியது. ஏனெனில், சட்டத்தை ஒருவராலும் கடை பிடிக்க முடியவில்லை (ரோமர் 3:9–23). சட்டத்தை மீறுகிற எவனும் அதனுடைய சாபத்திற்கும், மரணத்திற்கும் பாத்திரவானாகிறான் (கலாத்தியர் 3:10,11; யாக்கோபு 2:10).

அ. மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார் (கலாத்தியர் 3:13). நியாயப்பிரமாணத்தையும், தீர்க்கதரிசனங்களையும் அழிப்பதற்கு அல்ல, அவைகளை நிறைவேற்றுவதற்கே வந்தார் (மத்தேயு 5:17).

ஆ. விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாக கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் (ரோமர் 10:4).

இ. நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து சிலுவையின் மேல் ஆணியடித்து . . . அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார் (கொலோசெயர் 2:14,15).

ஈ. சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, யூதரையும், புறஜாதியாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார் (எபேசியர் 2: 15,16).

## VI. சிலுவையின் வெற்றி :

அ. ''நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை சிலுவையில் நமக்காகப் பாவமாக்கினார்'' (2 கொரிந்தியர் 5:21). அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார் (1 பேதுரு 2:24). கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார் (ஏசாயா 53:6). கிறிஸ்து தம்மை பலியாக ஒப்புக்கொடுத்ததின் நிமித்தம் பாவத்தின்மேல் வெற்றி சிறந்தார் (எபிரெயர் 9:26). நம்மெல்லாருடைய பாவங்களும் நியாயந்தீர்க்கப்பட்டு, சிலுவையின் மூலமாக நீக்கப் பட்டாயிற்று. இப்பொழுது கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்? என்ற கேள்விக்கு மட்டுமே ஒரு பாவி விடை கொடுக்க வேண்டும் (மத்தேயு 27:22). குமாரனை விசுவாசிக்கும் பொழுது அவர் சிலுவையில் செய்துமுடித்த பாவப்பரிகாரம் நமகுச் சொந்தமாகிறது.

ஆ. தேவனுக்கும், மனிதனுக்கும் பிரதான விரோதியாகிய சாத்தானை கிறிஸ்து சிலுவையிலே முழுமையாக தோற்கடித்தார்.

1. எபிரெயர் 2:14 – பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் ''தமது மரணத்தினாலே அழித்தார்''.
2. 1 யோவான் 3:8 – . . . பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.

இ. விசுவாசிக்கிய அனைவருக்கும் மரணபயத்திலிருந்து விடுதலை கிடைத்துள்ளது (எபிரெயர் 2:15).

ஈ. யூதருக்கும், புறஜாதியாருக்கம் இடையே இருந்த விரோதமானது சிலுவையினாலே தகர்த்தெறியப்பட்டது (எபேசியர் 2:16).

உ. அவரால் ''உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலவையிலறையுண்டிருக் கிறேன்''(கலாத்தியர் 6:14). ''திடன்கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்''என்றார் (யோவான் 16:33).

ஊ. கிறிஸ்துவே நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் (ரோமர் 10:4). கிறிஸ்து சிலுவையில் மரித்ததின் மூலம் நம்மை அதனுடைய சாபத்திலிருந்து மீட்டிருக்கிறார் (கலாத்தியர் 3:13).

## VII. சிலுவையானது தேவனின் செயலாக எண்ணப்படுகிறது :

அ. சிலுவையில் ஏற்பட்ட கிறிஸ்துவின் மரணமானது தேவனுடைய செயலாகும் என்று வேதம் எண்ணுகிறது.

1. ''நாமோ அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்'' (ஏசாயா 53:4).
2. ''கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்'' (ஏசாயா 53:6).
3. ''கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்'' (ஏசாயா 53:10).
4. ''பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்'' (2 கொரிந்தியர் 5:21).

ஆ. தேவன் தம்முடைய குமாரனை சிலுவையில் மரிக்கச் செய்ததின் மூலம் தம்முடைய அன்பை இவ்வுலகத்திற்குத் தெரியப்படுத்தினார். உலகம் காணாத இந்த அன்பை ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1. அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16).

2. நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய, பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது (1 யோவான் 4:10).
3. நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் (ரோமர் 5:8).

## VIII. சிலுவையானது மனிதனின் செயலாக எண்ணப்படுகிறது :

சிலுவையானது தேவன், மனிதன்மேல் பாராட்டும் அன்பிற்கு அடையாளமாகவும், அதே சமயத்தில் மனிதன், தேவன்மேல் பாட்டும் வெறுப்பிற்கு ஒரு அடையாளமாகவும் இருக்கிறது. கிறிஸ்துவின் மரணமானது ஒரு கொடூரமான, பயங்கரமான, குற்றமுள்ள கொலையாகும்.

1. நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான் (அப்போஸ்தலர் 2:36; 4:10).
2. பரிசுத்தமும், நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்து. . . ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள்; அவரைத் தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார் (அப்போஸ்தலர் 3:14,15).
3. நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலை செய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பினார் (அப்போஸ்தலர் 5:30).
4. இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும், அவரைக் கொலை செய்த பாதகருமாயிருக்கிறீர்கள் (அப்போஸ்தலர் 7:52).

<u>குறிப்பு :</u>

கிறிஸ்துவின் மரணம் தேவனுடைய சித்தத்தின்படியும், அவருடைய திட்டத்தின்படியும் நிறைவேறிற்று. ஆனால் அவருடைய மரணத்திற்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்று விலகிக்கொள்ள முடியாது. கிறிஸ்து வேண்டாமென்று மறுதலிக்கிற ஒவ்வொருவரும் கிறிஸ்துவைக் கொலை செய்த அந்த ரோமப் படைவீரர்களோடும், பிலாத்துவோடும் கைகோர்த்துக் செயல்படுகிறவர் களாய் காணப்படுகின்றனர். தேவனுடைய குமாரனை காலின் கீழ் மிதித்து தன்னைப் பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு சொடிதான ஆக்கினைக்கு பாத்திரவானாய் இருப்பான் (எபிரெயர் 10:29; பிலிப்பியர் 3:18).

## IX. வாதிக்கப்பட்ட சிலுவை :

நாமோ அவர் தேவனால் வாதிக்கப்ட்டவரென்று எண்ணினோம் (ஏசாயா 53:4). கிறிஸ்து உண்மையாகவே சிலுவையில் வாதிக்கப்பட்டார். கீழே கொடுக்கப்டடுள்ள வேதவசனங்களை விரிவாக்க முயலாமல் மனதில் வைத்துச் சிந்திக்கவும்.

1. சிலுவையானது அந்தகாரத்தினால் வாதிக்கப்பட்டது (மத்தேயு 27:45).
2. சிலுவையானது பாடுகளினால் வாதிக்கப்பட்டது (1 பேதுரு 3:18).
3. சிலுவையானது துக்கத்தால் வாதிக்கப்பட்டது (ஏசாயா 53:3,4).
4. சிலுவையானது மரணத்தால் வாதிக்கப்பட்டது (யோவான் 19:30,33).
5. சிலுவையானது பாவத்தால் வாதிக்கப்பட்டது (2 கொரிந்தியர் 5:21; 1 பேதுரு 2:24).
6. சிலுவையானது இரத்தத்தால் வாதிக்கப்பட்டது (1 பேதுரு 1:19; ரோமர் 5:9).

## X. சிலுவை பேசக்கூடிய காரியம் என்ன?

சிலுவை நமக்கு பேசக்கூடிய காரியங்கள் :

1. சிலுவையானது தேவனுடைய நீதி திருப்திப்படுத்தப்பட்டதை பேசுகிறது (2 கொரிந்தியர் 5:21; ரோமர் 3:26).
2. சிலுவையானது பரிபூரண கீழ்ப்படிதலைக் குறித்துப் பேசுகிறது (பிலிப்பியர் 2:5 –9).
3. சிலுவையானது எல்லையற்ற அன்பைக் குறித்துப் பேசுகிறது ( 1 யோவான் 4:10).
4. சிலுவையானது தேவனிடத்திலிருந்து கிடைக்கக்கூடிய தேவநீதியைக் குறித்துப் பேசுகிறது (ரோமர் 3:21,22; 2 கொரிந்தியர் 5:21).
5. சிலுவையானது சம்பாதிக்கப்பட்ட மீட்பைக் குறித்து பேசுகிறது (எபேசியர் 1:7).
6. சிலுவையானது ஆசீர்வதிக்கப்பட்ட ஒப்புரவாகுதலைக் குறித்துப் பேசுகிறது (கொலோசெயர் 1:20,21).
7. சிலுவையானது பாவம் நீக்கப்பட்டதைக் குறித்துப் பேசுகிறது (எபிரெயர் 9:26).

8. சிலுவையானது சாத்தானின் தோல்வியைக் குறித்துப் பேசுகிறது (எபிரெயர் 2:14; 1 யோவான் 3:8).
9. சிலுவையானது முழுமையான பாவமன்னிப்பைக் குறித்துப் பேசுகிறது (கொலோசெயர் 1:14).

**குறிப்பு :**

வேறுவிதத்தில் சொல்வோமென்றால், சிலுவையானது கிறிஸ்தவ அடிப்படைப் போதனைகள் ஒவ்வொன்றிற்கும் மையமாக அல்லது இருதயமாக விளங்குகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் சிலுவையின் உபதேசமானது தேவனுடைய வல்லமையும், கிறிஸ்தவ விசுவாசத்திற்கு அடிப்படையாகவும் இருக்கிறது என்று கூறுகிறார், இதை மனதில்கொள்ள வேண்டும் (1 கொரிந்தியர் 1:18; கலாத்தியர் 3:1; 1 கொரிந்தியர் 2:2).ஷ

## XI. சிலுவையும், கிறிஸ்தவ ஜீவியமும் :

அ. ஒரு கிறிஸ்துவன் சிலுவையைக் குறித்து வெட்கப்படாமல் எப்பொழுதும் மேன்மைபாராட்ட வேண்டும் (கலாத்தியர் 6:14).

ஆ. அவரால் உலகம் கிறிஸ்தவனுக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது. கிறிஸ்தவனும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறான் (கலாத்தியர் 6:14).

இ. சிலுவையானது அநேக மக்களுக்கு இடறலாய் இருக்கிறது. சிலுவைக்காக நிற்பவர்களும், அதற்காக வாழ்பவர்களும் சிலுவையினால் உண்டாகும் இடறல்களை சகித்துக்கொள்ள ஆயத்தமாக இருக்கவேண்டும் (கலாத்தியர் 5:11). அநேகர் கிறிஸ்துவின் சிலுவையினிமித்தம் துன்பப்பட வேண்டியதாய் இருக்கலாம் (கலாத்தியர் 6:12).

ஈ. மத்தேயு 16:24–ல் கிறிஸ்து இவ்விதமாகச் சொல்லியிருக்கிறார் : அதாவது, ''ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்''.

கிறிஸ்துவின் பணியில் நமக்கு நேரிடும் துன்பங்கள், துயரங்கள்,வியாகுலங்கள் முதலானவற்றைச் சகித்துக் கொள்ள வேண்டும் என்பதே மேலே கூறப்பட்ட வசனத்தின் பொருளாகும்.

உ. கிறிஸ்தவர்கள் அனைவரும் அந்தச் சிலுவையிலே கிறிஸ்துவோடு மரித்தவர்களாக எண்ணவேண்டும். மேலும் சிலுவையிலறைப்பட்ட ஒரு வாழ்க்கையை தேவனுடைய கிருபையினாலே வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் (ரோமர் 6:6,11–13; கலாத்தியர் 2:20; 5:24).

**முடிவுரை :**

கிறிஸ்துவின் சிலுவையானது ஒரு மனிதனுடைய வாழ்க்கையைப் பரிசுத்தப்படுத்துகிறதாய் இருக்கிறது. வேறொன்றும் பரிசுத்தப்படுத்தாது. இப்பாடத்தின் முக்கியத்துவத்தின் ஆழத்தை எந்த ஒரு பாடமும் இலகுவாக எடுத்துப்போட முடியாது. இப்பாடமானது நீங்கள் கிறிஸ்துவின் மேல் கொண்டிருக்கிற அன்பை இன்னும் அதிகப்படுத்தும் என்பது எங்களது உள்ளான நம்பிக்கை. மேலும் சிலுவையிலிருந்து புறப்பட்டு வரும் தேவனுடைய வல்லமை,கிருபை முதலானவற்றை இன்னும் அதிகமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தாகத்தை உங்களுக்குள் உண்டாக்க வேண்டும் என்பது எங்களது ஆவல்.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## இயேசுகிறிஸ்துவின் சிலுவை

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்]**

### சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்

1. சிலுவை அனைத்து கிறிஸ்துவ போதனைக்கும் தொடர்புடையது ஏன்?
   a. இது தனித்து நிற்கிறது
   b. அனைத்து கிறிஸ்தவ போதனைக்கும் இதுவே மூலகாரணமாக இருக்கிறது
   c. மற்ற போதனைகளுக்குத் தொடர்பு இல்லை
2. ரோமர்களின் கண்ணோட்டத்தில் சிலுவை என்பது என்ன?
   a. இலகுவான மரணம்
   b. உடனடி மரணம்
   c. வெட்கக்கேடும், அருவருப்பான மரணம்
3. யூதர்களின் கண்ணோட்டத்தில் சிலுவை மரணம் என்பது என்ன?
   a. சாபம்
   b. கொள்கைக்காக உயிர்த்தியாகம்
   c. கல்லெறிந்து கொலை செய்வதைக் காட்டிலும் மோசமானதல்ல
4. சிலுவைக்கு முன்பு நடந்த சம்பவங்களில் மிகவும் வேதனையுள்ளது எது?
   a. கெத்செமனேயில் கிறிஸ்துவின் வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையிலே விழுந்தது
   b. கொல்கொதாவிற்கு சிலுவையைச் சுமக்கச் செய்தனர்
   c. வாரினால் 40 அடிகள் அடித்தனர்
5. மற்ற பாடுகளோடு, இயேசுவானவர் எதிலும் பாடுபட்டார்?
   a. உடைந்த கால்கள்
   b. உடைந்த இருதயம்
   c. உடைந்த ஆவி
6. அப்போஸ்தலர்களின் பிரசங்கத்தின் மையக் கருத்து என்ன?
   a. கிறிஸ்துவின் பிறப்பு
   b. கிறிஸ்துவின் ஊழியம்
   c. கிறிஸ்துவின் சிலுவை
7. தேவனோடு மனிதனை இணைக்கும் உறவுக்குப் பெயர் என்ன?
   a. சுமத்துதல்
   b. ஒப்புரவாகுதல்
   c. தத்தெடுத்தல்
8. யூதர்களுக்கும் புறஜாதியினருக்கும் இடையே இருந்த எதை கிறிஸ்து நீக்கினார்?
   a. பகை
   b. மோசமான எண்ணம்
   c. போர் (யுத்தம்)

**9.** ஒப்புரவாகுதலைச் செய்பவர் யார்?

a. மனிதன்

b. போதகர்

c. தேவன்

**10.**கிறிஸ்து எதனால் நியாயப்பிரமாணத்தை நீக்கிப் போட்டார்?

a. சிலுவையின் மரணம்

b. உயிர்த்தெழுதல்

c. வாழ்க்கை

**11.** கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாக இருக்கிறார், காரணம் என்ன?

a. யூதர்களுக்கு மட்டும் இது ஏற்படுத்தப்பட்டது

b. நியாயப்பிரமாணத்தின் சாபத்தை தன்மேல் எடுத்துக் கொண்டார்

c. புதிய ஏற்பாட்டில் அதற்கு மதிப்பில்லை

**12.** கிறிஸ்துவின் மரணத்தைப் பார்க்கும்பொழுது இது மனித செயலாக இருக்கிறது எனவே நாம் இவ்விதமாக அழைக்கலாம்?

a. சரித்திரத்தில் நடந்த விபத்து

b. கொலை

c. தவறு

**13.** பொருத்துக :– கீழே உள்ள வசனங்கள் சிலுவையைக் குறித்து சொல்வது என்ன? **(சரியான வசனத்தை வார்த்தைக்கு முன்பு எடுத்து எழுதவும்)**

| | | |
|---|---|---|
| ------------ | சிலுவை மனிதனை தேவனோடு ஒப்புரவாக்கிற்று | a. எபிரெயர் 9:26 |
| ------------ | சிலுவையும் நியாயப்பிரமாணமும் | b. 1 பேதுரு 3:18 |
| ------------ | சிலுவை பலி மரணத்தின் வெற்றி | c. பிலிப்பியர் 2:5–9 |
| ------------ | சிலுவை தேவனின் செயலாகக் கருதப்படுகிறது | d. ஏசாயா 53:4 |
| ------------ | சிலுவை மனிதனின் செயலாகக் கருதப்படுகிறது | e. கலாத்தியர் 6:14 |
| ------------ | சிலுவைப் பாடுகள் | f. 2 கொரிந்தியர் 5:19 |
| ------------ | சிலுவையின் பரிபூரண கீழ்ப்படிதல் | g. ரோமர் 6:6,11–13 |
| ------------ | விசுவாசி உலகத்துக்கு சிலுவையில் அறையுண்டிருக்கிறார் | h. 1 கொரிந்தியர் 4:1–2 |
| ------------ | விசுவாசி கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டதாக எண்ணிக்கொள்ள வேண்டும் | i. ரோமர் 10:4 |

**14.** பொருத்துக :– கீழே உள்ள வசனங்களின்படி, சிலுவை என்ன பேசுகிறது? **(சரியான வசனத்தை வார்த்தைக்கு முன்பு எடுத்து எழுதவும்)**

| | | |
|---|---|---|
| --------- | நீதி திருப்திசெய்யப்பட்டது | a. 1 யோவான் 4:10 |
| --------- | பரிபூரண கீழ்ப்படிதல் | b. எபிரெயர் 9:26 |
| --------- | முடிவில்லாத அன்பு | c. கொலோசெயர் 1:14 |
| --------- | ஒப்புரவாகுதல் | d. 2 கொரிந்தியர் 5:21 |
| --------- | பாவம் நீக்கப்பட்டது | e. கொலோசெயர் 1:20,21 |
| --------- | முழுமையான பாவமன்னிப்பு | f. பிலிப்பியர் 2:5 9 |

**15.கோடிட்ட இடங்களை நிரப்புக :–**

கிறிஸ்து சிலுவையின் மூலம் எல்லாப் பாவத்தின்மேல் வெற்றி கொண்டார். கீழே உள்ள வசனத்தின்படி, அவர் எப்படி செய்தார்?

2 கொரிந்தியர் 5:21 ––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––

1 யோவான் 3:8 ––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––

**16.**––––––––––––––––––––––– சிலுவை எல்லாவற்றிற்கும் முக்கியமான இடத்தை வகிக்கிறது.

**(இந்த வார்த்தைகளில் ஒன்றை எடுத்து எழுதவும் : மதம், உலக வரலாற்றில், துன்பம்)**

17.யோவான் 3:16–ல் எந்தச் சொற்றொடர் தேவனின் மிகப்பெரிய அன்பைக் குறித்துப் பேசுகிறது?

–––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––

–––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––

**18.**(கீழே உள்ள வார்த்தைகளிலிருந்து எடுத்து வாக்கியமாக எழுதவும் : மகிமை, இடறல், வெட்கம், வெறுத்து, கல்லறை, மறுதலி, சந்தோஷப்படு, சிலுவை, கிறிஸ்தவ வாழ்க்கை, பாரங்கள்)

a. ஒரு விசுவாசி சிலுவையைக் குறித்து ஒரு போதும் ––––––––––––––––––––––––––––––––––

b. சிலுவை அநேக மக்களுக்கு ––––––––––––––––––––––––––––––––––

c. இயேசுவானவர் கூறியது, ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத்தான் –––––––––

தன் –––––––––––––––––– எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.

அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்

பதிவு எண் : ____________________

முழு பெயர் : ____________________________________________

முகவரி : ____________________________________________

____________________________________________